Attendance letter - telephone interpreter service

# பாடசாலை வருகை குறித்த கடிதம் – தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை

மாணவ-மாணவியினது பெயர்

Name of student

அன்புடைய பெற்றோர்/பராமரிப்பாளர் அவர்களுக்கு

உங்களுடைய பிள்ளையின் பாடசாலை வருகை குறித்து எமக்கு உள்ள கவலைக்-கரிசனங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கடிதம் சுருக்கமாகச் சொல்கிறது.

தங்கள் பிள்ளைகள் சுகவீனமாக இருந்தால் அல்லது வேறு காரணத்திற்காகப் பாடசாலை அதிபர் விடுமுறைக்கு ஒப்புதல் அளித்திருந்தால் தவிர, பாடசாலை திறந்திருக்கும் ஒவ்வொரு நாளும் தமது பிள்ளைகள் பாடசாலைக்கு வருவதை பெற்றோர்கள்/பராமரிப்பாளர்கள் உறுதிப்படுத்தவேண்டும் என்று 'NSW கல்விச் சட்டம் (1990)' வேண்டுகிறது. உங்களுடைய பிள்ளை பாடசாலைக்கு வராமலிருந்தால், வராமை நிகழ்ந்த ஏழு நாட்களுக்குள்ளாக விளக்கம் ஒன்றை அளிக்குமாறு நீங்கள் வேண்டப்படுவீர்கள்.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கடிதத்தினை விளங்கிக்கொள்வதில் உங்களுக்கு சிரமங்கள் இருந்தால், எம்மால் உங்களுக்கு உதவ ஏது செய்யும் விதமாக எம்முடன் தயவுசெய்து தொடர்புகொள்ளுங்கள்.

எம்முடன் தொடர்புகொள்ளும் வேளையில் உங்களுக்கு மொழிபெயர்த்துரைப்பாளர் உதவி தேவைப்படுமாயின், தயவு செய்து 131 450-ஐ அழைத்து உங்களுடைய மொழியில் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள். நீங்கள் அழைக்க விரும்பும் இலக்கத்தினை தொலைபேசி இயக்குனருக்குச் சொல்லுங்கள், அதையடுத்து உங்களுடைய உரையாடலில் உங்களுக்கு உதவுவதற்காக மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை அவர் இணைப்பிற்குக் கொண்டுவருவார். இந்த சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படாது.

பாடசாலைத் தொடர்பு நபரது பெயர்

Name of school contact person

பாடசாலைத் தொடர்பு நபரது தொலைபேசி இலக்கம்

School contact person phone number